16.04.2026

RLTOP No.3/2025

PW1– சாகிராள் பானு – க/பெ. மிகராஜ்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.04.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( எதிர்மனுதாரர் தரப்பில்)

1. எனது கணவருக்கு, எனது மாமனார் சர்வே எண்.13/3 ல் 19 செண்ட் எழுதிவைத்தார் என்றால் சரிதான். அதே தேதியில் எனது கணவரின் உடன்பிறந்த சகோதரர்களுக்கும் சமமாக மற்ற பங்குகளை எழுதிவைத்தார் என்றால் சரிதான்.

2. எனது சொத்திற்கு தெற்குபக்கம் எனது கணவரின் சகேதாரர் முகம்மது முஸ்தபா இடம் உள்ளது என்றால் சரிதான். எனது சொத்திற்கு வடபக்கம் எனது கணவரின் சகேதாரர் நஸீர் இடம் உள்ளது என்றால் சரிதான்.

3. எனது கணவர் மேற்படி 19 செண்டில் சில சொத்துக்களை விற்றுள்ளார் என்றால் 15 செண்டை விற்றுள்ளார். அதில் கமலா என்ற நபருக்கு விற்றதை காட்டும் கிரைய ஆவணம் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. எ.ம.சா.ஆ.1 ல் தபசில் விவரத்தில் மேற்கும், வடக்கும் எழுதிக்கொடுத்த நபரின் கைவச மனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே கமலா என்ற நபருக்கு 2015 ம் ஆண்டில்

மற்றொரு ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் சான்றிட்ட நகல் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. மேற்படி எ.ம.சா.ஆ.1,2 ஆவணங்களுக்கு எதிராக நானோ, எனது கணவரோ இன்றுவரை எந்த வழக்கோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.2 ஆவணத்தில் தபசில் விவரத்தில் எல்கைமாலில் கையிருப்பு மனை என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

6. எதிர்மனுதாரர் வழக்கு சொத்தில் என்ன கடை நடத்திவருகிறார் என்றால் டீக்கடை நடத்திவருகிறார். எதிர்மனுதாரர் மனுக்கூற்றுப்படி எந்த தேதியிலிருந்து கடை நடத்திவருகிறார் என்றால் 2010 முதல் கடை நடத்திவருகிறார். சாட்சி தற்போது 2020 முதல் கடை நடத்திவருகிறார் என கூறினார்.

7. பிராது தபசில்சொத்து அமைந்துள்ள இடம் கொல்லம் தேசிய நெடுஞ்சாலையை நோக்கியுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள கடைகள் தான் எதிர்மனுதாரர் நடத்திவரும் கடை என்றால் சரிதான். மேற்படி புகைப்படம் எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எ.ம.சா.ஆ.3 புகைப்படத்தில் கமலா வீடு உள்ளது என்றால் சரிதான். கமலாவின் வீடு சாலையில் இருந்து 20 அடி உள்ளே தள்ளிதான் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். கமலா வீட்டின் ஆஸ்பெட்டாஸ் முடியும் இடத்தில்தான் எதிர்மனுதாரர்

கடைகள் உள்ளது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.1,2 மூலம் வாங்கிய கமலாவே புறம்போக்கு இடம் என்பதால் தான் 20 அடி உள்ளே தள்ளிகட்டியுள்ளார் என்றும், எங்களது அத்து கமலாவீட்டின் சுவரோடு முடிகிறது என்றாலும் சரியல்ல. எங்களது இடமானது சாலை அடுத்துள்ள வாறுகால் வரை எங்களது இடம் உள்ளது. எ.ம.சா.ஆ.3 ஆவணத்தில் எங்கு வாறுகால் உள்ளதா என்றால் வாறுகால் உள்ளது என்று கூறினார்.

8. எதிர்மனுதாரரின் கடையின் அளவு எனக்கு சரியாக தெரியாது, அது எனது மாமனார் கடை. மனுவில் 2ம் தபசில் விவரத்தில் 10x10 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை, அது எனது மாமனார் கடை. எதிர்மனுதாரரின் கடை 10x10 க்கு கிடையாது, அதற்கும் கூடுதலாக உள்ளது என்று சொன்னால் எனக்கு ஞாபகம் இல்லை, அது எனது மாமனார் கடை.

9. மனுவில் உள்ள சொத்தானது எதிர்மனுதாரரின் கடைக்கு மேற்குபக்கம் உள்ளது என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தை அளப்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது. மனு தபசில் கட்டிடம் கற்குடி வருவாய் கிராமம் புல எண்.15 ல் உள்ளது என்றால் சரியல்ல, புல எண்.13/3 ல் உள்ளது.

10. எதிர்மனுதாரரின் கடைக்கு வடபக்கம் என்ன உள்ளது என்றால் காலி இடம் உள்ளது. நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அதற்கு வடப்பக்கம் மகேஷ்வரன் கடை உள்ளதா என்றால் சாட்சி தற்போது ஆமாம் உள்ளது என்று கூறினார்.

11. எதிர்மனுதாரரின் கடைக்கு தெற்குபக்கம் என்ன உள்ளது என்றால் முத்தையா கடை உள்ளது. 2020 க்கு முன்பு மனுக்கூற்றுப்படி பிராது கட்டிடத்தில் என்ன இருந்தது என்றால் நாயுடு சமுதாயத்தை சேர்ந்த நபர் வாடகைக்கு இருந்தார், அவரது பெயர் எனக்கு தெரியாது, எனது கணவருக்கு தான் தெரியும். அவர் எந்த காலக்கட்டத்தில் வாடகைக்கு இருந்தார் என்றால் 2019 ல்இருந்தார், அவரிடமிருந்து தான் எதிர்மனுதாரருக்கு கடையை கொடுத்தோம். அவர் கட்டளைகுடியிருப்பை சார்ந்தவர் என்றால் அவரது உறவினர்கள் அங்கு உள்ளார்கள்.

12. எதிர்மனுதாரர் எங்களிடம் எந்த ஒப்பந்தமும் செய்யவில்லை என்றாலும், அவர் கடை நடத்திவருவது அரசுக்கு சொந்தமானது என்றாலும், எனது சொத்திற்கு கிழக்குபக்கம் கடைகள் இடையூறாக இருப்பதால் நானும், எனது சகாக்களும் இடிக்க முயற்சி செய்து அதன் விளைவாக புளியரை காவல்நிலையத்தில் புகார் மனு கொடுக்கப்பட்டு, காவல்துறை அறிவுறுத்தலின்படி சட்டத்திற்கு புறம்பாக நாங்கள் அப்புறப்படுத்தக்கூடாது என குறிப்பிட்டதால் நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல.

13. நான் பரிகாரம் கோரியுள்ள சொத்து மனு தபசில் கட்டிடம் அமைந்துள்ள இடம் இல்லை என்பதால் எனது பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ.1,2 ன்படி புல எண்.13/3 ல் தங்களுக்குரிய இடம் இருப்பதாக புல எல்கைமால்களில் நானே ஒப்புக்கொண்டபின்பு புல எண்.13/3 ல் எனக்கு எந்தவித உரிமையும் இல்லாதபட்சத்தில் எனது மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

14. எதிர்மனுதாரர் கடை நடத்திவரும் மின்இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது.

15. எனது மனுவில் குறிப்பிட்டுள்ள புல எண்ணிற்கும் மனு கட்டிடத்திற்கும் எந்த சம்பந்தமில்லாததால் தான் வாய்மொழி ஒப்பந்தம் என பொய்யான கூற்றை கூறி இந்த மனுவை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ.1,2 க்கு விரோதமாக ம.சா.ஆ.2 ஆவணம் உள்ளதால் அது ஏற்புடைய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல.

16. நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்வதற்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது என்றால் சரிதான்.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**